Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 14 2024

வியாழக்கிழமை நவம்பர் 14, 2024 | ஒளி: 10 கதிர் 093 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## 10ஆவது பாராளுமன்றத்துக்காக

# இன்று வாக்களிப்பு

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல், இன்று வியாழக்கிழமை 14 ஆம் திகதி நடைபெறுகின்றது. பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் மக்களின் நேரடி வாக்குகள் மூலம் தெரிவாகும் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 8,352 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இந்த தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5,006 வேட்பாளர்களும் 3,346 சுயேச்சைக் குழு வேட்பாளர்களும் போட்டியிடும் நிலையில் இவர்களுக்கு 17,140,354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 160 தொகுதிகளில் அமைக்கப்படவுள்ள 13,421 வாக்களிப்பு நிலையங்களில் 14ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரையில் வாக்களிப்புகள் இடம்பெறவுள்ளன. அதன் பின்னர், தபால் மூல வாக்களிப்புகளை எண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். நிறைவில், வாக்கெண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கை ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடைபெற்றது. இந்தக் காலப்பகுதியில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் சார்பாக 764 குழுக்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்ததுடன், அவற்றில் 74 குழுக்களின் வேட்பு மனுக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டன. இதற்கமைய 690 குழுக்கள் தேர்தல் களத்தில் போட்டியிடத் தகுதி பெற்றன. இந்த குழுக்களின் சார்பாக நாடு முழுவதும் 8,352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தொடர்ச்சி P2



# புள்ளடியை மட்டும் இடவும்

நாட்டில் இன்று (14) வியாழக்கிழமை இடம்பெறும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும்போது, புள்ளடியை மாத்திரம் பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது 1,2 மற்றும் 3 என இலக்கங்கள் அல்லது புள்ளடி பயன்படுத்தப்பட்டன.

எனினும், பொதுத் தேர்தலில் வாக்களிக்கும்போதும், விருப்பு வாக்குகளை வழங்கும்போதும் புள்ளடியை மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

எனவே, உரிய முறையைப் பின்பற்றி அளிக்கும் வாக்கினைச் செல்லுபடியாகும் வாக்காக வாக்காளர்கள் மாற்ற வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



# பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்து

காலி சவுத்லண்ட்ஸ் கல்லூரியில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகளை ஏற்றிச் சென்ற பேருந்து, புதன்கிழமை (12) காருடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவ இடத்தில் விரைந்து செயற்பட்ட பொலிஸார், விபத்துக்குள்ளான பேருந்திலிருந்த வாக்குப்பெட்டிகளை மீட்டு அவற்றை வேறு வாகனத்திற்கு மாற்றிக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தனர்.



# ஆசியாவில் முன்னணி

ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி நிலவரப்படி, கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையானது (CSE), ஆசியாவிலேயே அமெரிக்க டொலர்களில் 29.65 சதவீதமான அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) வளர்ச்சியின் மூலம் ஆண்டின் இன்றைய(13) திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய இரண்டாவது அதியுயர் செயல்திறன் கொண்ட பங்குச் சுட்டெண்ணாக முன்னணியிலுள்ளதாக ப்ளூம்பெர்க் வலைத்தளம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# வேட்பாளர் பட்டியலில் பெயர் இருப்பதாக பெண் முறைப்பாடு

■ எம்.றொசாந்த்

நாட்டில் இன்று (14) நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சை குழுவொன்று தனக்குத் தெரியாமல் தன்னுடைய பெயரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவிடம் பெண்ணொருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ICTA பணிப்பாளர் சபையின் முதல் கூட்டம்

புதிதாக நியமிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) பணிப்பாளர் சபைக் கூட்டம் புதன்கிழமை(13) பிற்பகல் இடம்பெற்றது.

பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல், தேசிய போட்டித்தன்மை மற்றும் அனைத்து பிரஜைகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் நன்மைகளை ஈட்டித்தரக்கூடிய, வலயத்தின் வளர்ச்சி கண்ட நாடுகளுக்கு இணையாக இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தைப் பலப்படுத்தல் தொடர்பிலான தனது அர்ப்பணிப்பு மற்றும் நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பிலான தலைமை ஜனாதிபதி ஆலோசகராக நியமிக்கப்பட்ட கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய அதன் நிறைவேற்று அஸ்தஸ்த்தற்ற தலைவராகச் செயற்படுவார்.

தொடர்ச்சி P2



# கண்டியில் சொகுசு வாகன உரிமையாளருக்கு சிக்கல்

பல கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு வாகனங்களை சட்டவிரோதமான முறையில் வைத்திருந்ததாகக் கூறப்படும் கண்டியில் உள்ள கார் விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளருக்கு நாட்டை விட்டு வெளியேற முடியாதவாறு கண்டி நீதவான் வாசன நவரத்ன, செவ்வாய்க்கிழமை (12) தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கண்டி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், சட்டவிரோத வாகனங்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு பல தடவைகள் சந்தேகநபருக்கு அறிவிக்கப்பட்ட போதும் பொலிஸாரைத் தவிர்த்து விட்டு, அவர் வெளிநாடு செல்ல வாய்ப்புள்ளதாகக் கூறி தடை உத்தரவு. பிறப்பித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# "வாக்களித்தன் பின்னர் வீடுகளுக்கு செல்லுங்கள்"

நாடளாவிய ரீதியில் 1,3421 வாக்களிப்பு மத்திய நிலையங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல்கள் சட்டத்துக்கும், பொதுச் சட்டத்துக்கும் அமையப் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு பொலிஸ் உட்பட முப்படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்களித்ததன் பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள், பொது இடங்களில் ஒன்று சட்டம் மற்றும் ஒழுங்குக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை இயலுமான வகையில் தவிர்த்துக் கொள்ளுங்கள். அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.



தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் குறித்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பதில் பொலிஸ்மா அதிபரும்,

தொடர்ச்சி P2

# பயணக்கட்டுபாடுகளை நீக்கியது அமெரிக்கா

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறுகம்பேவுக்கான பயணக் கட்டுப்பாடுகளை ஒக்டோபர் 23ஆம் திகதி நீக்கியுள்ளது.

"அருகம்பேவுக்கு 2024 ஒக்டோபர் 23ஆம் திகதி வெளியிடப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளைக் கொழும்பு அமெரிக்கத் தூதரகம் நீக்கியுள்ளது. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அனைத்து அமெரிக்கக் குடிமக்களையும் இலங்கைக்கான பயண ஆலோசனையை மதிப்பாய்வு செய்யவும், விழிப்புடன் இருக்கவும், உங்கள் சுற்றுப்புறங்கள் குறித்து விழிப்புடன் இருக்கவும்,

தொடர்ச்சி P2

# அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாகும்



வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கான பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் பிரதிகள் சம்பந்தப்பட்ட தூதரகங்களின் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குவைத், ஜப்பான், கட்டார் தூதரகங்கள், அவுஸ்திரேலியா மெல்பேர்ன், கனடா டொராண்டோ, இத்தாலியின் மிலான்,டுபாய், கொன்சல் ஜெனரல் அலுவலகங்கள் ஊடாக இந்த முன்னோடித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## 10ஆவது பாராளுமன்றத்துக்காக
# இன்று வாக்களிப்பு

வாக்காளர்கள் இறுதி நேரம் வரையிலும் காத்திருக்காமல், நேரகாலத்துடன் சென்று வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கெனவே, அச்சுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயணக்கட்டுபாடுகளை நீக்கியது அமெரிக்கா

சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளைப் புகாரளிக்கவும் ஊக்குவிக்கிறது. உள்ளூர் அதிகாரிகளுக்கு அவசரநிலைகள் (119) தூதரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டியதாக ஈரானிய பிரஜை ஒருவருக்கு எதிராக அமெரிக்க நீதித்துறை குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து கடந்த வாரம் பயண ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பயணக் கட்டுப்பாடுகளை நீக்குமாறு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்திடம், செவ்வாய்க்கிழமை (12) வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாகும்

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் வசதிக்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களிலிருந்து பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் நகல்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட 07 வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் கொன்சல் ஜெனரல் அலுவலகங்கள் மூலம் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, குவைத், ஜப்பான் மற்றும் கட்டார் தூதரகங்கள், அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன், கனடாவின் டொராண்டோ, இத்தாலியின் மிலான் மற்றும் டுபாய் தூதரகங்கள் மூலம் இந்த முன்னோடி திட்டத்தைச் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்தும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு அமைக்கப்பட்டுள்ள முறைமைக்கு ஏற்ப வெளிநாட்டுத் தூதரகங்கள் மூலம் இந்தச் சான்றிதழ்களை வழங்கும் வகையில் பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சினால் கூட்டாகப் பராமரிக்கப்பட்டு e-BMD தரவுக் கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆரம்பக் கட்டத்தில், e-BMD தரவுக் கட்டமைப்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சுமார் 45 மில்லியன் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை மட்டுமே விநியோகிக்கப்படுகிறது.

இந்தச் சான்றிதழ்கள் 01.01.1960க்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் என்பதோடு தரவுக்கட்டமைப்பின் ஆரம்பக் கட்டத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட சான்றிதழ் பின்னர் திருத்தப்பட்டால், அத்தகைய சான்றிதழ்கள் தரவு அமைப்பில் புதுப்பிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது.



# ஆசியாவில் முன்னணி

இச்சிறந்த செயல்திறனானது, இலங்கையின் மூலதனச் சந்தையின் மீள் திறனையும் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அதன் வளர்ச்சியின் சாதகத்தன்மையையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. 2024, ஒக்டோபர் 25 அன்று முடிவடைந்த வாரத்தின் நாளாந்த சராசரி விற்பனை ரூ.3.058 பில்லியனாக உள்ளது.

மேலும், CSE கடந்த இரண்டு தொடர்ச்சியான வர்த்தக நாட்களில் (வியாழன் மற்றும் வெள்ளி) தினசரி விற்பனை ரூ.4.7 பில்லியனைக் கடந்ததுள்ளது.

அதே வாரத்தில், அனைத்துப்பங்கு விலைச்சுட்டெண் 12,517.58 புள்ளிகளில் நிறைவடைந்ததுடன், அவ்வாண்டிற்கான அதியுயர் விற்பனை வருவாய்க்கான பதிவிற்கு ஒரேயொரு புள்ளியே குறைந்த நிலையில் சிறந்ததொரு பதிவை மேற்கொண்டிருந்தது. அதேவேளை, முதல் 20 பெரிய மற்றும் அதிக திரவப் பங்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் S&P SL20 சுட்டெண்ணானது, வலுவான ஆதாயங்களைப் பதிவுசெய்து, 3,759.30 புள்ளிகளில் நிறைவடைந்துள்ளது.

இதனால் CSE முதலீட்டாளர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான தெரிவொன்றாக விளங்குவதுடன், நேர்மறையான வேகத்தைத் தக்கவைத்து, மேம்பட்ட முதலீட்டு வாய்ப்புகளுக்கு வழி வகுக்கிறது.



# கண்டியில் சொகுசு வாகன உரிமையாளருக்கு சிக்கல்

கண்டியில் உள்ள கார் விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளர் என கூறப்படும் டொன் இசுரு பிரதீப் சத்தாதிஸ்ஸ சேரம் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் அவருக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகிய கண்டி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையத் தளபதி பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க, கண்டி அனிவத்த வட்டரவும் வீதியிலுள்ள வீடொன்றின் கரேஜில் சந்தேகத்திற்கிடமான இரண்டு வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டார். .எம்.டபிள்யூ. நவீன பந்தய காரொன்றும் மிட்சுபிஷி ஜீப் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட கார்களை அரசு ஆய்வாளரிடம் ஒப்படைத்த பி.எம். டபிள்யூ. ரக கார் இலங்கையில் அசெம்பிள் செய்யப்பட்ட வாகனம் எனவும், மிட்சுபிஷி ரக ஜீப்பின் சேஸ் எண் கழற்றப்பட்டுள்ளதாகவும் அரசாங்க பரிசோதகர் தெரிவித்துள்ளதாக திலக் சமரநாயக்க தெரிவித்தார்.

குறித்த வாகனங்கள் தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்காக பொலிஸாருக்கு வருமாறு பல சந்தர்ப்பங்களில் சம்மந்தப்பட்ட சந்தேகநபருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர் பொலிஸாருக்கு வராமல் பொலிஸாரைத் தவிர்க்க ஆரம்பித்ததாகப் பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தெரிவித்தார்.

# வேட்பாளர் பட்டியலில் பெயர் இருப்பதாக பெண் முறைப்பாடு

அந்த பெண், யாழ்ப்பாண உதவி தேர்தல் ஆணையாளரிடம் செவ்வாய்க்கிழமை (12) முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

“சுயேச்சை குழுவொன்று தன்னுடைய அனுமதி இன்றி , வேட்பாளர் பட்டியலில் எனது பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இந்த விடயம் இதுவரை காலமும் எனக்குத் தெரிய வரவில்லை. திங்கட்கிழமை(11) அன்று எனது மாணவி ஒருவர் எனக்கு தொலைபேசி அழைப்பினை எடுத்து, தேர்தலில் போட்டியிடுகிறீர்களா? என வினவியபோதே, எனது பெயர் வேட்பாளர் பட்டியலில் வந்திருந்தமை தெரியவந்தது.

அதனை உறுதிப்படுத்தி கொள்வதற்கு யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள அலுவலகத்தில், அது என்னுடைய பெயர் தான் என்பதனையும் எனது அனுமதியின்றி, எனது பெயரை வேட்பாளர் பட்டியலில் சுயேச்சை குழு தலைவர் உள்ளடக்கி உள்ளார் என்பதனையும் செவ்வாய்க்கிழமை (12) உறுதிப்படுத்திக் கொண்டேன்”

அது தொடர்பில் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் முறையிட்டுள்ளேன்” என தெரிவித்தார்.

# ICTA பணிப்பாளர் சபையின் முதல் கூட்டம்

சஞ்ஜய கருணாசேன, ஹர்ஷ புரசிங்க, சந்திம குரே, பந்துல ரணதுங்க, ஜெப்ரி சுல்பர், சாமிஸா அபேசிங்க, ஷானுக ரெபெல் ஆகியோர் தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) பணிப்பாளர் சபை உறுப்பினர்களாவர்.

தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் நிறைவேற்று அஸ்தஸ்த்தற்ற தலைவராகக் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய (ICT) துறையில் 30 வருடங்களுக்கு மேலதிகமான சேவையில் ஈடுபடுகிறார். விருதுபெற்ற தொழில்துறைகளுக்குப் பங்களிப்பை வழங்கியுள்ள அவர் கேம்பிரிட்ஜ், பிரிஷ்டல், வோர்விக் பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்றுள்ளதுடன், Unique Digital Identity வேலைத்திட்டம் உள்ளிட்ட இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், அவர் Axiata,GSMA உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் Srilankan Airlines நிறுவனங்களில் பணிப்பாளராகப் பதவி வகித்துள்ளார்.

பணிப்பாளர் சபையிலுள்ள சஞ்சய கருணாசேன அரச சேவையில் டிஜிட்டல் மயமாக்கலை பயன்படுத்துதல் தொடர்பிலான முன்னோடி என்பதோடு, நிறைவேற்று ஆலோசகராகவும் Enterprise Softwre Architect ஆகவும், பல்திறன் மற்றும் தொழில்நுட்பவியலாளரும் ஆவார்.

இத்துறைக்குள் 26 வருட அனுபவத்தைக் கொண்டிருக்கும் அவர், Virtusa மற்றும் WS02 உள்ளிட்ட உலக மென்பொருள் நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார்.

2008 - 2013 இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) தலைமையைத் தொழில்நுட்ப அதிகாரியாக பணியாற்றியுள்ளதோடு, Nimbus Venture (Pvt) Ltd, Pontoon (Pvt) Ltd, மற்றும் Digital Democracy Collective இணை ஸ்தாபகரும் ஆவார். சஞ்சய கருணாசேன மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியலில் இளங்கலை விஞ்ஞானம் மற்றும் கணினி விஞ்ஞானத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

# “வாக்களித்தன் பின்னர் வீடுகளுக்கு செல்லுங்கள்”

சட்டத்தரணியுமான நிஹால் தல்துவ குறிப்பிடுகையில்,

வேட்பாளர் ஒருவர் வாக்காளர்களுக்கு வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்டவிரோதமானது. விசேட தேவையுடையவர்கள். வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதாயின் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திடம் முன்கூட்டியதாகவே அனுமதி பெற வேண்டும்.

தேர்தல் பணிகளின் நிமித்தம் 63,145 பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் நேரடியாகக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அத்துடன், 3,200 விசேட அதிரடிப் படையினரும், 6,000 இணை சேவை உத்தியோகஸ்த்தர்களும், 11 ஆயிரம் முப்படையினரும் 12,227 சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

3,109 நடமாடும் சேவைகளும், வாகன சோதனைகளுக்காக 269 வீதி தடைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

1,591 தற்காலிக தொழிலாளர்கள் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பாதுகாப்பு கடமைகளுக்காக 4,525 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

**“வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சட்டவிரோதமானது. விசேட தேவையுடையவர்கள். வயது முதிர்ந்தோர் ஆகியோருக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதாயின் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்திடம் முன்கூட்டியதாகவே அனுமதி பெற வேண்டும். தேர்தல் பணிகளின் நிமித்தம் 63,145 பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் நேரடியாகக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.**

பொதுத்தேர்தல் பணிகள் மற்றும் பாதுகாப்பு நிமித்தம் பொலிஸார் உட்பட முப்படையினர் உள்ளடங்களாக சுமார் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.
தேர்தல் மற்றும் பொதுச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வாக்களிப்பு முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும் என்றார்.

# புகைப்படம் எடுக்க வேண்டாம்



வாக்குப்பதிவு தொடர்பான நடவடிக்கைகளைப் புகைப்படம் எடுப்பதையோ, படம் எடுப்பதையோ, அதுபோன்ற படங்கள் அல்லது காணொளிகளை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுவதையோ பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

வாக்குச் சாவடிகள், குறியிடப்பட்ட வாக்குச் சீட்டுகளைப் புகைப்படம் எடுப்பது அல்லது படமெடுப்பது, அவற்றை சமூக வலைத்தளங்களில் பகிர்வது தேர்தல் சட்டத்தை மீறும் செயல் என்று ஆணையம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனவே, இந்த வழிகாட்டுதல்களைப் புறக்கணிப்பவர்கள் சட்டரீதியான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

# மாவீரர் துயிலும் இல்லத்தில் மாபெரும் சிரமதானம்









■ வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் மாபெரும் சிரமதானம் மாவீரர் பணிக்குழு ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்றது.

பணிக்குழுவின் தலைவர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் மற்றும் செயலாளர் நாகமணி கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் பங்குபற்றுதலில் மாவீரர் பெற்றோர்களும் இதில், கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது. அங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கும் முகமாக இந்த சிரமதானம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# “மேய்ச்சல் தரவை தர மறுக்கின்றனர்”

■ புகழிந்தன்




மன்னார் நானாட்டான் பிரதேச பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்டும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தலையீட்டினால் எட்டு வருடங்களாகக் கையளிக்கப்படவில்லை என பணியாளர்கள் குற்றச்சாட்டினார்கள்.

தமது மேய்ச்சல் தரவை நிலங்களை மீட்டுத் தருமாறு கோரி வட மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில், செவ்வாய்க்கிழமை(12) அன்று மகஜர் கையளித்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், “நானாட்டான் பகுதியிலுள்ள மேய்ச்சல் தரவை நிலத்தை நம்பி சுமார் 2,500 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரம் கால்நடைகள் உள்ளன.

எமக்கான மேய்ச்சல் தரவை நிலம் ஒதுக்கப்பட்ட நிலையிலும், அதனை கையெடுப்பதற்கு அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

மன்னாரில் உள்ள உயர் அதிகாரிக்கு மேய்ச்சல் தரவை நிலத்தில் திருட்டுத்தனமாகக் காணி இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில், அதனை மக்கள் பாவனைக்கு வழங்க விடாமல் அரசியல் பின்னணியில் தடுப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

மேய்ச்சல் தரவை நிலத்தைத் தருமாறு எட்டு வருடங்களுக்கு மேலாகப் போராடி வருகிறோம் தருகிறோம் என கூறுகிறார்கள் ஆனால் இதுவரை தரவில்லை. இவ்வாறான நிலையில் வடமாகாண ஆளுநரிடம் எமது கோரிக்கையைக் கையளித்திருக்கிறோம் அவர் எதிர்வரும் 21ஆம் திகதி மன்னாருக்கு வருகை தந்து எமது பிரச்சினைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே எமது பிரதேச மக்கள் வாழ்வாதார தொழிலாகப் பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில், எமக்கான மேய்ச்சல் தரவை நிலத்தைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்தனர்.




# தலதாவில் வழிபாடு

இலங்கை விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பௌத்த சமய வழிபாட்டு நிகழ்வுகள் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் பங்கேற்பில் நவம்பர் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெற்றது.

மல்வத்து மகாநாயக்க ஸ்ரீ சித்தார்த்த சுமங்கலாபிதான மகாநாயக்க தேரர் அஸ்கிரி மகாநாயக்க வரகாகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்சானந்த ஞானரதனா தேரர் ஆகியோர்களிடம் ஆசிகளைப் பெற்றுக் கொண்டார். பின்பு ஸ்ரீ தலதா வழிபாடுகளில் ஈடுபட்டார்.

விமானப்படை நலன்புரி பணிப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பௌத்த சமய நிகழ்வில், தாய்நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும், பிரதேச ஒருமைப்பாட்டிற்காகவும் உயிர்நீத்த விமானப்படை வீரர்களுக்காகப் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சேவையாற்றிய விமானப்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆசிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி இனோகா ராஜபக்ஷ மற்றும் விமானப்படை தலைமை தளபதி மற்றும் விமானப்படை பணிப்பாளர்கள், உயிரிழந்த விமானப்படை வீரர்களின் உறவினர்களும் கலந்துகொண்டனர்.

## இலங்கை பல்கலைக்கழக பெண்கள் சம்மேளனத்தின்
# சர்வதேச சிறுவர், முதியோர் தினம்



இலங்கை பல்கலைக்கழக பெண்கள் சம்மேளனம் (SLFUW) சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை நினைவுகூரும் வகையில் விசேட நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தது.

இந்நிகழ்வு கடந்த மாதம் 26ஆம் திகதி SLFUW தலைமையகத்தில் நடைபெற்றது. இது SLFUW இன் அங்கத்தவர்களின் ‘குடும்ப ஒன்றுகூடல்’, நடன நிகழ்ச்சிகள், பாடல்கள் மற்றும் இசை, விளையாட்டுகள் என்பனவற்றுடன் கூடியதாக அமைந்திருந்தது. காலை மற்றும் மதிய உணவையும் உள்ளடக்கிய பரிசுகளுடன் கூடிய வேடிக்கை நிறைந்த நாளாக அது அமைந்திருந்தது.

SLFUW இன் தலைவர் கேணல் டாக்டர் உதுல கிருஷ்ணரத்ன கருத்து தெரிவிக்கையில், பார்வையற்ற பெண்கள் சம்மேளனம் மற்றும் பார்வையற்ற குழந்தைகளுக்கு அவர்களின் எதிர்காலத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் பணமும் நன்கொடைகளும் வழங்கப்பட்டமை விசேட அம்ச மாகும் என்றார். இந்த ஆண்டு முழுவதும் பல சமூக மேம்பாட்டுப் பணிகளில்

ஈடுபட்டிருந்த SLFUW குழுவின் ஆண்டிறுதி நிகழ்வாக இந்த விழா அமைந்தது.

உள்ளூர் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் பெண்களுக்கு உதவித்தொகை வழங்குதல். கந்தே உடபங்குவ வித்தியாலயத்திற்கு முப்பரிமாண திறந்தவெளி ஆய்வகத்தை நிர்மாணிப்பதற்கு நன்கொடைகளை வழங்குதல். பாடசாலை மாணவர்களுக்கு நன்கொடைகள் மற்றும் நிலையான உபகரணங்கள் வழங்குதல். பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுகள் மற்றும் நன்கொடைகள் வழங்குதல்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடை வழங்குதல்.

SLFUW இன் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் நினைவாக, வனவாசலையிலுள்ள பரமித முதியோர் இல்லத்தில் உள்ள கைதிகளுக்கு விசேட மதிய உணவுடன் அத்தியாவசிய மருந்துகள்,

மற்றும் அனைத்து கைதிகளுக்கும் தலா பண நன்கொடையும் வழங்கப்பட்டது. தேவமுல்லை, தலாவ, வனவாசலை ஆகிய பகுதிகளிலுள்ள விகாரைகளின் பிக்குகளுக்கு அன்ன தானம், மற்றும் மருத்துவச் செலவுக்கான பணமும் வழங்கப்பட்டது.

SLFUW செயற்குழுவின் தற்போதைய பதவிக்காலம் முடிவடைவதால், அடுத்த வருடாந்த பொதுக்கூட்டம் நவம்பர் 23 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு SLFUW கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

# அவதூறான வீடியோ பதிவு தொடர்பில் முறைப்பாடு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பிர்தௌஸ் நளீமிக்கு எதிராகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தொடர்பிலும் காத்தான்குடியின் பிரமுகர்கள் சிலர் தொடர்பாகவும் வெளியிடப்பட்ட வீடியோ பதிவு தொடர்பாக பிர்தௌஸ் நளீமியினால் செவ்வாய்க்கிழமை(12) இரவு காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீடியோவை தயாரித்தவர்கள், சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியவர்கள், பகிர்ந்தவர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், தனது சட்டத்தரணிகள் ஊடாக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிர்தௌஸ் நளீமி தெரிவித்துள்ளார்.

# கொரியா உதவி

விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கு கொரிய சிறிய அளவிலான தொழில் முயற்சிகள் சங்கம், இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது.

அத்தோடு, மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி வழங்குவதற்கான வசதி அளிக்கவும் கொரியா சிறிய அளவிலான தொழில் முயற்சிகள் சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

கொரிய சிறிய அளவிலான வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளுக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில், கொரியாவில் மீன்பிடித் தொழிலுக்காக இலங்கைத் தொழிலாளர்களுக்கு இலங்கையில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் கொரியா சிறிள அளவிலான தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் கிம் சுங் ரேங் (Kim Chung Ryong) மற்றும் பலர் கலந்து கொண்டுள்ளனர்.



# வாக்களிப்பதற்கு உங்கள் கால்களை பயன்படுத்துங்கள்

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் வாக்களிப்பு, நாடளாவிய ரீதியில், இன்று 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 4 மணிக்கு நிறைவடையும். வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டதன் பின்னர், வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். தபால்மூல வாக்குகளே முதலில் எண்ணப்படும்.

பலர் இந்த நாளுக்காக கை விரலைக் கட்டிக் காத்திருந்தனர், மற்றவர்கள் இந்த நாள் வராமல் இருந்தால் நல்லது என்று காத்திருந்தனர். வெற்றியாளர் மட்டுமே ஒரு வாக்கை விரும்புகிறார். தோற்றவனுக்கு அது பிடிக்காது. ஒவ்வொரு ஜனாதிபதி,பொது, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் இது பொதுவான அம்சமாகும்.

ஜனநாயகம் என்பது முதலாளித்துவத்தின் அரசியல் வடிவம். அது முதலாளித்துவத்தின் தளத்தில் இயங்கினாலும், மக்களாட்சியில் இருந்து மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கிறது. நமது நாட்டில் ஜனநாயக தேர்தல் நடைபெறவுள்ளது. மன்னராட்சிகள் இல்லாமல், ஒருதலைபட்ச ஆட்சி இல்லாமல், தீவிரவாத மரணதண்டனைகள் இல்லாமல், தீவிர வலதுசாரி பொறிகள் இல்லாமல் இந்தத் தேர்தலில் அதிகபட்ச பலன்களைப் பெற உங்கள் கைகளை அல்ல, உங்கள் கால்களைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். நாட்டிற்குச் சிறந்த அரசாங்கம் எது என்பதை உங்கள் இதயம் அறியும். அந்த அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது உங்களுக்கு நல்லது.

பல நூறு ஆண்டுகளாக பிரித்தானியரின் காலணியாக இருந்த இலங்கைக்கு 1931ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை கிடைத்தது. இந்த வாக்கெடுப்பு 1931ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் திகதி முதல் ஜூன் 20ஆம் திகதி வரை 7 நாட்கள் இலங்கை கவுன்சில் அல்லது அப்போது இருந்த பாராளுமன்றக் கட்டமைப்பின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்டது.

தேர்தல் நடந்து கொண்டிருக்கும் போதே, ஆட்சியாளர்கள் அலுவலகங்களில் இருந்து பானை, சட்டி துணியுடன், வெளியே வந்து, அடுத்த நிமிடத்தில் புதியவர்கள் வந்து பழைய இருக்கைகளில் அமர்ந்து விடுகின்றனர். இந்த மக்கள் அனைவரும் தங்கள் நாற்காலியில் உட்கார்ந்து, இனி ஒருபோதும் வெளியே செல்லக்கூடாது என்ற முடிவு அவர்களின் ஆழ் மனதில் மறைந்துள்ளது. ஆனால் அப்படி வரும் பலர் ஐந்து வருடங்கள் கழித்து வீட்டிற்குச் செல்ல வேண்டியுள்ளது.

வரவிருக்கும் அரசாங்கத்தின் கீழ் பாதிக்கப்படும் குடிமக்கள் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு புதியதைத் தேர்வு செய்கிறார்கள். இந்தப் புதியது பழையவற்றின் நீட்சியே. ஒருவேளை அவர்கள் கையில் இருக்கும் ஆயுதங்கள் மாறலாம். ஆயுதம் மாறினாலும் அதை ஏந்தியவனின் மனம் மாறவில்லை. அவர் இந்த நாட்டின் பழைய அரசியல் மாதிரியின் பிரதிநிதி. அவர் ஆட்சியில் நீடிக்க விரும்புகிறார். அவர் தனது குழந்தைகள், உறவினர்கள் மற்றும் செல்லப்பிராணிகளை ஆட்சிக்குக் கொண்டு வர விரும்புகிறார். அப்போதும் இது நடந்தது. இன்றும் அது நடக்கிறது. அது நாளையும் நடக்கும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# வெல்லப்போவது யார்?

**முருகானந்தம் தவம்**

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் இன்று 14ஆம் திகதி நடைபெறும் நிலையில் பாராளுமன்றத்திலுள்ள 225 ஆசனங்களில் மக்களின் நேரடி வாக்குகள் மூலம் தெரிவாகும் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 8,352 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இந்த தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5,006 வேட்பாளர்களும் 3,346 சுயேச்சைக் குழு வேட்பாளர்களும் போட்டியிடும் நிலையில் இவர்களுக்கு 17,140,354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். நாடு முழுவதும் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 160 தொகுதிகளில் அமைக்கப்படவுள்ள 13,421 வாக்களிப்பு நிலையங்களில் 14ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரையில் வாக்களிப்புகள் இடம்பெறவுள்ளன.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கை ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடைபெற்றது.இந்தக் காலப்பகுதியில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் சார்பாக 764 குழுக்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்ததுடன், அவற்றில் 74 குழுக்களின் வேட்பு மனுக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டன. இதற்கமைய 690 குழுக்கள் தேர்தல் களத்தில் போட்டியிடத் தகுதி பெற்றன. இந்த குழுக்களின் சார்பாக நாடு முழுவதும் 8,352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### மேல் மாகாணம்

கொழும்பு மாவட்டத்தில் 18 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள், 19 சுயேச்சை குழுக்களின் சார்பாக 966 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 1,765,351 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 19 ஆசனங்களுக்காக 24 அரசியல் கட்சிகள், 17 சுயேச்சை குழுக்களின் சார்பாக 902 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 1,881,129 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் 11 ஆசனங்களுக்காக 15 அரசியல் கட்சிகள், 13 சுயேச்சை குழுக்களின் சார்பாக 392 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 1,024,244 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

### மத்திய மாகாணம்

கண்டி மாவட்டத்தில் 12 ஆசனங்களுக்காக 12 சுயேச்சை குழுக்களின் சார்பாக 435 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 1,191,399 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்காக 16 அரசியல் கட்சிகள், 7 சுயேச்சை குழுக்களின் சார்பாக 184 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 429,991 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 8 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள், 11 சுயேச்சை குழுக்களின் சார்பாக 308 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 605,292 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

### தென் மாகாணம்

காலி மாவட்டத்தில் 9 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள், 5 சுயேச்சை குழுக்களின் சார்பாக 264 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 903,163 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 15 அரசியல் கட்சிகள், 7 சுயேச்சை குழுக்களின் சார்பாக 220 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 686,175 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 16 அரசியல் கட்சிகள், 9 சுயேட்சைக்குழுக்களின் 250 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 520,940 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

### வடக்கு மாகாணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 23 அரசியல் கட்சிகள், 21 சுயேச்சை குழுக்களின் சார்பாக 396 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 593,187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 24 அரசியல் கட்சிகள், 27 சுயேச்சை குழுக்களின் சார்பாக 459 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 306,081 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

### கிழக்கு மாகாணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள், 22 சுயேச்சை குழுக்களின் சார்பாக 392 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 449,686 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 22 அரசியல் கட்சிகள், 42 சுயேச்சை குழுக்களின் சார்பாக 640 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 555,432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 4 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள், 14 சுயேச்சை குழுக்களின் சார்பாக 217 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 315,925 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

### வட மேல் மாகாணம்

குருநாகல் மாவட்டத்தில் 15 ஆசனங்களுக்காக 12 அரசியல் கட்சிகள், 10 சுயேச்சை குழுக்களின் சார்பாக 396 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 1,417,226 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 8 ஆசனங்களுக்காக 24 அரசியல் கட்சிகள், 15 சுயேச்சை குழுக்களின் சார்பாக 429 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 663,673 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

### வட மத்திய மாகாணம்

அனுராதபுரம் மாவட்டத்தில் 9 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள், 9 சுயேச்சை குழுக்களின் சார்பாக 312 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 741,862 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பொலனறுவை மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்காக 13 அரசியல் கட்சிகள், 2 சுயேச்சை குழுக்களின் சார்பாக 120 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 351,302 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

### ஊவா மாகாணம்

பதுளை மாவட்டத்தில் 9 ஆசனங்களுக்காக 15 அரசியல் கட்சிகள், 5 சுயேச்சை குழுக்களின் சார்பாக 240 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 705,772 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக 12 அரசியல் கட்சிகள், 3 சுயேச்சை குழுக்களின் சார்பாக 135 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 399,166 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

### சப்ரகமுவ மாகாணம்

இரத்தினப்புரி மாவட்டத்தில் 11 ஆசனங்களுக்காக 18 அரசியல் கட்சிகள், 7 சுயேச்சை குழுக்களின் சார்பாக 350 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன், தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 923,736 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 9 ஆசனங்களுக்காக 14 அரசியல் கட்சிகள், 4 சுயேச்சை குழுக்களின் சார்பாக 216 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 709,622 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு இந்த குழுக்களின் வேட்பாளர்களிலிருந்து 196 பேரே தெரிவு செய்யப்படவுள்ளனர். மிகுதி 29 ஆசனங்களுக்கும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொள்ளும் வாக்கு விகிதாசாரத்திற்கு அமைவாகத் தேசியப் பட்டியல் ஊடாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தல் காலத்திலும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் அதேவேளை வாக்களிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியும் அதிகரித்தே வருகின்றது. இலங்கையில் கடந்த 2020 நடந்த பாராளுமன்றத்துக்கான தேர்தலில் வாக்களிக்க 16,263,885 வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்தபோதும் 12,343,302 வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்திருந்த நிலையில் 3920,583 பேர் வாக்களிக்கவில்லை. 744,373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் 46,64956 பேர் வாக்களிப்பில் ஆர்வமின்றி இருந்துள்ளனர்.

இன்று 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல், அடுத்த 5 ஆண்டுகள் நாம் எப்படியிருக்கப் போகிறோம் என்பதை நாமே தீர்மானிக்கும் மிகப் பெரிய துருப்புச் சீட்டு.இந்தத் தேர்தலில் நாம் அளிக்கப்போகும் வாக்கு மிக முக்கியமானது. பாராளுமன்றத் தேர்தல் நாள், நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் நாள். நாடு எப்படி மேம்பட வேண்டும், நாட்டில் வாழும் மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டும் .எம்மை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கும் நாள். இதைத் தீர்மானிப்பது எந்தக் கட்சியும் அல்ல, எந்தத் தலைவரும் அல்ல. இதனைத் தீர்மானிப்பது இந்த நாட்டின் மக்களான வாக்காளர்கள்.

நாட்டு மக்களின் வாக்குகள் அந்த நாட்டின் ஆட்சியை உருவாக்கும், ஆட்சியை மாற்றும் வல்லமை கொண்டது. எனவே, வாக்காளன் தனக்கான ஆட்சியாளன் யார் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் தன்னிடம் இருக்கின்றது என்பதைப் புரிந்து செயல்படும்போது அவன் உண்மையிலேயே ஒருநாள் நீதிபதி ஆகிவிடுகிறான். ஆனால் இன்று தங்கள் வாக்குரிமையை மக்கள் பயன்படுத்துகின்றனரா, என்று பார்த்தால் வாக்காளர்களான மக்களிடம் வாக்குகளைப் பயன்படுத்தும் ஆர்வம் மிகவும் குறைவாகவேயுள்ளது.

வாக்களிப்பது எமது கடமை மட்டுமல்ல, எமது உரிமை. எனவே, இந்த நாடு நமக்கு அளித்த இந்த உரிமையைச் சரியாகப் பயன்படுத்துவது நமது கடமை.



## வாழ்வியல் தரிசனம்

முதியவர்களில் அநேகர், தங்களின் இளமைக் காலத்தின் நினைவுகளுடன் ஐக்கியப்பட்டபடி இயங்குவார்கள். மேலும், தங்களது முதுமையில் தேகம் தளர்ந்து போனாலும், பழைய கம்பீரமான கற்பனையில் இருந்து விலகுவதில்லை

தங்களின் குடும்பத்தில், தங்களின் ஆளுமையிலிருந்து விலகுவதும் இல்லை. நல்ல பண்புகளை ஊட்டிய, நல்ல நிலையில் தங்களின் சந்ததிகளை மேலான நிலைக்கு இவர்களே உயர்த்தினார்கள்.

இதனால், இவர்களை எதிர்த்து, முரண்பட எந்தக் காரணங்களும் கிடையாது. பேரன், பேத்திகளுடன் தங்களுடைய பொழுதுகளைச் சந்தோஷமாகக் கழிக்கும் இவர்களைக் கண்டால் பூரிப்பாக இருக்கும்.

ஆனால், ஒரு சில குடும்பங்களில் முதியோர்களைக் கனம் பண்ணாதவர்களும் இருக்கின்றார்கள். கிராமியப் பண்பாட்டில் வாழ்ந்தவர்கள் வாழ்ந்தவர்கள், இன்னமும் தாத்தா, பாட்டி ஆகியோரின் அறிவுரைகளை மதித்தே வாழ்கின்றார்கள்.

முதியோரின் அனுபவ ஞானம் போற்றுதலுக்குரியது. காலநிலை, சோதிடம், விவசாயம், நாட்டு வைத்தியம் போன்றவற்றுடன், சமையக் கலை கலாசாரம் போன்றவற்றை ஊட்டி வருகின்றார்கள். பாட்டிமார்களின் சமையல் பிரமாதமாக இருக்கும்.

நாங்கள் கற்ற ஒழுக்கம், அன்பு, பாசம் போன்றவற்றுடன் உறவுமுறைகளையும் இளைய தலைமுறைக்குச் சொல்லிக்கொடுப்போரை மறக்க முடியுமா?

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாதையை புனரமைத்து தருமாறு கோரிக்கை

**எஸ்.தில்லைநாதன்**

கொடுக்குளாய்-இயக்கச்சி அபாய வெளி பாதை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பாக உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டு கழகத் தலைவருமாகிய கணேஸ்வரன் திங்கட்கிழமை (29) அன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

“ இந்த அபாய வெளி பாதை வழியாக நாளாந்தம் 2,000க்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். குறித்த பாதை தற்பொழுது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதால், கையிருப்பில் உள்ள சிறு நிதியை கொண்டு பள்ளங்களை மூடுவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த பாதை புனரமைப்பு செய்யாவிட்டால் பலர் உயிரிழக்க நேரிடும்.

இந்த அபாயவெளி பாதை இருந்திருந்தால் வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த பலரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும்.

வர்த்தக போக்குவரத்து, அரச ஊழியர்கள்,பாடசாலை மாணவர்கள், மருத்துவ நோயாளிகள் என பலர் இந்த பாதையில் பயணிப்பதை அரசாங்கமும், அரசியல்வாதிகளும் அறிந்தும் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு முறையாவது எமது பிரதேசத்திற்கு வந்து இந்த அவல நிலையை பார்வையிட வேண்டும். மழைக்காலம் என்பதால் அவசரமாக இந்த வீதியை புனரமைப்பு செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்” என்றார்.



# இலங்கை பாராளுமன்றம் வளர்ந்த கதை தெரியுமா?



ஞா .மைக்கல் பெவன்,
3ஆம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

மக்களால் மக்களுக்காக முன்னெடுக்கப்படுகின்ற மக்களாட்சியில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களுக்கான ஒரு தேர்வு முறையாகவே பாராளுமன்ற தேர்தல் முறைமை காணப்படுகின்றது. இம்முறைமையில் மக்களுடைய அரசியல் நம்பிக்கை கட்டி எழுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு இலங்கை இந்த பாராளுமன்றத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டே இன்று வரை இயங்கி வந்துள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

தற்காலத்தில் அது விருத்தி அடைந்து பாராளுமன்ற முறை தேர்தலானது நாட்டின் அரசாங்கத்தினை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைத் தெரிவு செய்வது மக்களின் ஜனநாயக ரீதியான பண்புகளில் ஒன்றாக மிளிர்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆதலால் இலங்கை காலனித்துவத்திற்கு உட்பட்ட போது, பிரதானமாக பிரித்தானியரின் ஆட்சிக்காலம் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை முன்வைத்தன. அவற்றின் பரிணாம வளர்ச்சியை நோக்கும்போது பாராளுமன்ற முறையின் வளர்ச்சியையும் அறிந்து கொள்ளலாம்.

இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலின் தோற்றம் அதன் அரசியல் அமைப்பின் மற்றும் தேர்தல் முறைகளின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல், பரபரப்பான அரசியல் மாற்றங்களுக்கும், சமூக மற்றும் பொருளாதார சவால்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

பாராளுமன்றம் அமைக்கப்பட்ட காலம் (1947-1972) இலங்கையில் பாராளுமன்றம் சுதந்திரத்துக்குப் பிறகு 1947ஆம் ஆண்டு, இந்திய அரசியல் ஆணையம் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. பிரித்தானிய ஆளுநர் கீழ் 1947இல் பாராளுமன்ற உறுப்பினர்களை நாட்டு மக்களால் தேர்ந்தெடுப்பதற்கான முழு தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியது. 1947ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது பிரித்தானிய முறைப்படி பொதுத் தேர்தலின் அடிப்படையில் நடைபெறுகிறது.

1972 அரசியலமைப்பின்போது, மாறுதல்கள் 1972இல் இலங்கை சோசலிஸ குடியரசாக மாற்றப்பட்டது. அதுவே, பாராளுமன்ற அமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களுக்கான அதிகாரங்களை மீண்டும் பரிந்துரைக்கப்பட்ட புதிய அரசியலமைப்பில் பாராளுமன்றத்தின் புதிய நிலை குறிக்கப்பட்டது.

1978 அரசியலமைப்பின் கீழ் தற்போதைய மாற்றங்கள் 1978ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாராளுமன்றத் தேர்தல் முறையை புதிய பரபரப்பான மற்றும் பலபங்கு பிரதிநிதித்துவ முறை (mixed member proportionall system) என்ற முறையில் அமைக்கப்பட்டது. இதில் பெரும்பான்மை மற்றும் பங்கு அடிப்படையில் தேர்தல் நடைமுறை அமுல்படுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 ஆக இருந்தனர். அதில் 196 உறுப்பினர்கள் தொகுதிக் கேள்விகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மற்றும் 29 உறுப்பினர்கள் இலங்கை தேசிய பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர்.

தற்போதைய முறை பெரும்பான்மையும் பங்குதாரர் அடிப்படையிலும் செயல்படுகின்றது. இங்கு பொதுவாக இரு தொகுதிகளில் (நேரடி தேர்தல் மற்றும் பொது வாக்காளர் பட்டியல்) பிரிவுகள் உள்ளன. நேரடி தேர்தல் (first-past-the- post) முறையில் முக்கிய தொகுதிகள் உள்ளன. அவை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பரபரப்பான பங்கு அடிப்படையிலான தேர்வு (proportional representation) மூலம் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகள் வாக்காளர்களின் தொகுதியின் அடிப்படையில் வாக்குகளைப் பிரித்தெடுக்கின்றன.

**“ சமூகப் பிரச்சினைகள் பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் கூட்டணிகள் பாராளுமன்றத்தில் அதிக தாக்கம் ஏற்படுத்தும். பொதுவான வாக்காளர் பங்கு பிரச்சினைகள் மற்றும் அரசியலின் எதிர்கால பாதைகள் பற்றிய பரபரப்பு தொடரும். தற்போது 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் புதிய வியாபகம் மூலம் புதிய அரசாங்கம் ஒன்றின் நிறுவி இலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என எல்லோராலும் நம்பப்படுகிறது**

சமூக மற்றும் அரசியல் சவால்கள் பல வகையான சமூக, இன மற்றும் பொருளாதார சவால்களும் இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலின் தோற்றத்தை மாற்றியுள்ளன. குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் சிங்கள தேசியக் கட்சி இடையே பரபரப்பான வாக்கு பிரச்சினைகள் மற்றும் செயல்திறன் குறைபாடுகள் அரசியல் முறையைத் தீவிரமாகப் பாதித்துள்ளன.

பாராளுமன்றத்தின் பங்கு சட்டப்பேரவையில் அரசின் முக்கிய பிரச்சினைகள், அரசியல் சட்டங்கள் மற்றும் சமூகநலத் திட்டங்கள் பற்றி உரையாடப்படும். பாராளுமன்றம் இரு சபைகளாக இயங்குகிறது. மூல சபையானது (lower house), 196 உறுப்பினர்களுடன் செயல்படுகிறது. இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் முறைகள் அதன் வரலாற்றில் பல்வேறு அரசியல் மாற்றங்களையும் சுதந்திரத்துக்குப் பிறகு உள்ள சமூக மற்றும் பண்பாட்டு மாற்றங்களையும் பிரதிபலிக்கின்றது. தற்போது சமூக மாற்றங்கள் மற்றும் அரசியல் கூட்டணிகள் நிறைவாகப் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறையில் மிகவும் நவீன மற்றும் பரபரப்பான முறைகள் உள்ளன. இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலின் தோற்றம், இனப்பற்றின மரபுகள், அரசியல் மாற்றங்கள் மற்றும் பொது வாக்காளர்களின் தலையீடுகளைப் பரிசீலிக்கும் முறையாகவே வளர்ந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களின் விருப்பங்களைப் பின்பற்ற இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் முறைகள் அரசியல் மாற்றங்கள் மற்றும் சுதந்திரம் அடையாளமாகவே செயல்பட்டது.

அந்த வகையில், 1833ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தத்தின் இனவாரியான தேர்தல் முறை ஊடாக சட்டசபை எனும் பெயரில் பாராளுமன்றத்துக்கு அத்திவாரமிட்ட இலங்கை வரலாற்றில் முதன்முறையான சிறிய பாராளுமன்றமாக 11 பேரைக் கொண்ட சபை ஒன்று காணப்பட்டது. இதில் உத்தியோக சார்பில் 6 பேரும் உத்தியோக சார்பற்ற 5 பேருமாகக் காணப்பட்டனர். அதில் இலங்கை நிர்வாகிகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இது பின்தொடர்ந்து வந்த நிலையில், குருமக்கலம் சீர்திருத்தத்தில் படித்த இலங்கையர் சார்பாக சேர் பொன் ராமநாதன் 1910ஆம் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை மூலம்ஆண்டு சட்ட சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். இந்த வரையறுக்கப்பட்ட வாக்கு முறையானது இலங்கையில் 4% படித்த சொத்துடைய ஆண்களை மாத்திரமே உள்வாங்கி இருந்தது.அதனைத் தொடர்ந்து மனிங் 1921 மனிங்டவன்செயர் 1924 ஆகிய அரசியல் சீர்திருத்தங்களில் சட்டசபையில் உத்தியோக சார்பற்றவரின்தொகை அதிகரித்தாலும் அந்த சட்டசபையின் இனவாரியான தேர்தல் முறையும் மாகாண ரீதியான பிரதிநிதித்துவ முறை காணப்பட்டது.

ஆனால், 1931ஆம் ஆண்டு இலங்கை அரசியலின் திருப்பம் என அழைக்கப்படும் டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தில் சர்வசன வாக்குரிமை மூலமாக 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலரும் எந்தவித சாதி,இன, மத,பால்,வர்க்க பேதமின்றி வாக்களிக்கத் தகுதியானவர்கள் எனக் குறிப்பிட்டதன் மூலமாக மக்களின் அரசியல் அறிவு விருத்தி அடையத் தொடங்கி அரசியல் கட்சிகள் பல ஆரம்பிக்க வாய்ப்பாக அமைந்தது.

இந்த சட்டசபையில் 101 அங்கத்தவர்கள் அங்கம் வகித்ததோடு சட்ட சபைக்குப் பதிலாக இலங்கை அரசாங்க சபை நிறுவப்பட்டது. இதன் மூலமாக புதிய நிறைவேற்று குழு ஒன்றும் தேர்வு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்து பாராளுமன்ற முறையானது 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பில் ஈரவை கொண்ட பாராளுமன்றமாகப் பெயர் பெற்று விளங்கியது.
இங்குப் பிரதிநிதிகள் சபையில் 101 அங்கத்தவரின் செனட் சபையில் 30 அங்கத்தவரும் அங்கம் வகித்தனர். அதனைத் தொடர்ந்து, 1960ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் 157 ஆக அதிகரித்ததோடு, 1972ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு நிறுவப்படுவதற்கு முன்னர், 1971ஆம் ஆண்டு அக்டோபர் 2இல் செனட் சபை கலைக்கப்பட்டு 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசானபோது, இடம்பெற்று பாராளுமன்ற தேர்தலில், பாராளுமன்றம் ஆனது ‘தேசிய அரசு பேரவை’ என் அழைக்கப்பட்டது. இது 168 பேர் தேர்தலின் மூலம் தேர்வூ செய்யப்பட்டனர்.


இந்த தேசிய அரசு பேரவையானது, மீஉயர் அதிகாரம் கொண்ட சபையாக விளங்கியது. நிறைவேற்றுத் துறைக்குப் பேரழகு நிர்வாகத்தையே இது வழங்கியது.

இதனைத் தொடர்ந்து, 1977ஆம் ஆண்டு தேர்தலில் தேசிய அரசு பேரவை கலைக்கப்பட்டு ‘பாராளுமன்றம்’ எனும் பெயரில் புதிய பாராளுமன்ற முறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது அதுவே இன்றுவரை சிறிய சிறிய மாற்றங்களுக்கு உட்பட்டு பாராளுமன்றத்தில் 225 பேரைக் கொண்ட உயரிய மன்றமாகக் காணப்படுகிறது. இதில் 29 பேர் தேசிய பட்டியல் ஊடாகவும் 196 பேர் விகிதாசார தேர்தல் முறை மூலமாக தெரிவு செய்யப்பட்டனர்.

இம்முறையே பிற்பட்ட கால தேர்தல்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இறுதியாக 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுடன் பாராளுமன்றம் ஆனது ஐந்து வருட கால செயலாற்றல் கொண்டது.

தேர்தல் முடிவுகளுக்கு ஏற்ப அரசியலமைப்பில் புதிய திருத்தங்கள் மற்றும் கூட்டணி அரசியலை உருவாக்குவதற்கான முயற்சிகள் இப்போது 2024 தேர்தலின் மூலம் புதிய சமூகமயமான அணுகுமுறைகள் மற்றும் பொருளாதார திட்டங்கள் உருவாக்கப்படலாம். முக்கிய எதிர்கால கேள்விகள் அரசியலமைப்பில் திருத்தங்கள், வருங்கால சட்டங்கள் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள். அரசியல் வழிகாட்டிகள் பல கட்சிகளின் சமூக நடத்தை மற்றும் அரசியலமைப்பின் சிக்கல்களை நேரடியாகச் சமாளிக்கும் புதிய திட்டங்கள், 2024ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்பங்களை உருவாக்கக்கூடும். பொதுவான சமூகப் பிரச்சினைகள் பொருளாதார சவால்கள் மற்றும் அரசியல் கூட்டணிகள் பாராளுமன்றத்தில் அதிக தாக்கம் ஏற்படுத்தும். பொதுவான வாக்காளர் பங்கு பிரச்சினைகள் மற்றும் அரசியலின் எதிர்கால பாதைகள் பற்றிய பரபரப்பு தொடரும். தற்போது 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் புதிய வியாபகம் மூலம் புதிய அரசாங்கம் ஒன்றின் நிறுவி இலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என எல்லோராலும் நம்பப்படுகிறது.

# இவர்களும் மனிதர்களே



**“ எனக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் கிட்டியது. அப்பா அம்மாவின் கனவும் நலவானது**

**“ விழிப்புணர்வுகளை மக்களிடத்தில் உணர வைக்க வேண்டும் என்று உறுதிப்பூண்டவனாய் அப்பாவின் கரங்களை பற்றிக் கொண்டேன்**



றொசில்டா அன்டன்

வழமையாக காலை ஆறு மணிக்கு அப்பா வேலைக்கு போவதற்கு ஆயத்தமானார். அப்பா ஒரு நாளில் வீட்டில் விடுமுறையில் நின்றதை கண்டதில்லை. அப்பாவின் வேலை கடினமோ தெரியவில்லை. ஆனாலும், அப்பா எங்களிடம் ஒரு நாளும் தனது வேலை கடினம் என்பதை காட்டிக் கொண்டதில்லை. அன்று நானும் வழமை போல, அப்பாவுடன் சைக்கிளில் ஏறி டியூசனுக்கு போனேன். காலை நேர வகுப்பிற்கு அப்பா என்னை அழைத்துச் சென்று விடுவார். டியூஷன் முடிய பக்கத்திலே நான் கல்வி கற்கும் பாடசாலை என்பதால் எனக்கு மிக இலகுவாக இருந்தது.

உயர்தரம் கணிதப் பிரிவில் கடைசி ஆண்டு என்பதால் பாடங்களை முடிப்பதில் ஆசிரியர்கள் கவனமாயிருந்தார்கள். பரீட்சை காலம் நெருங்குவதால் மிக அவதானமாக படித்தேன். அப்பா அரசாங்க வேலை என்றாலும் அவருக்கு விடுமுறை கிடைப்பது அரிதே. வேலை விட்டு வரும் போதே களைத்து சோர்ந்தே வருவார். கைகளை தூக்க முடியாத வேதனையுடனும், முகம் சோர்வடைந்தும் கால்கள் தளர்வடைந்துமே வருவார். வீட்டிற்குள் வரமுன்னாமே கிணற்றடியில் குளித்துவிட்டே வருவார். வீட்டிற்குள் வந்ததுமே அம்மா சூடாக தேநீர் கலந்து வைத்திருப்பார். அதை சுவைத்து குடிக்கும் அழகை பார்க்கவே ஆசையாய் இருக்கும். தேநீரென்றால் அப்பாவுக்கு அவ்வளவு அலாதி பிரியம். வீட்டிற்கு நான் ஒரு ஆண் பிள்ளை எனக்குப் பின் இரண்டு தங்கைகள் உள்ளனர்.

அவர்களும் படிப்பில் கெட்டிகாரர்கள். வீட்டில் கஷ்டமாக இருந்தாலும் நாங்கள் மூவரும் பெற்றோர்களுக்கு சிரமம் கொடுப்பதில்லை அப்பா அழகாக உடுத்தியதை ஒரு நாளும் நான் கண்டதில்லை தான் கஷ்டப்பட்டாலும் தனது பிள்ளைகள் நன்றாக படிக்க வேண்டும் என்பார். தன்னைப் பற்றி சிறிதும் சிந்திக்காதவர். அம்மாவும் எங்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவார். அப்பாவின் சம்பள பணம் போதாமையினால் அம்மா தனது சுய தொழிலான தையலை வாழ்வாதாரமாகக் கொண்டு அதன் மூலமாக கிடைக்கும் பணத்தில் எங்களை நன்றாக படிக்க வைத்தார்.

பரீட்சை நாளும் நெருங்கியது அன்று காலையில் பரீட்சை என்பதால் அப்பா அதிகாலையிலே எழுந்து தனது கடமைகளை முடித்துக் கொண்டு என்னையும் பாடசாலைக்கு சைக்கிளில் அழைத்துச் சென்றார். நான் பொறியலாளர் ஆக வேண்டும் என்பதே எனது ஆசை. “ மகன் ராசா கவனமாக பரீட்சை நிதானமாக எழுது எந்த சிந்தனையும் உனக்கு வேண்டாம் பரீட்சையில் மட்டும் கவனம் செலுத்து” அதற்கு “சரி அப்பா நீங்கள் கவனமாக போய் வாருங்கள் நான் பரீட்சையை கவனமாக நிதானமாகவும் எழுதுவேன்” என்றேன். என்னை எனது வீட்டார் ராசா என்று அழைப்பதே வழக்கம். அப்பா என்னை பாடசாலையில் விட்டு விட்டு வேலைக்குச் சென்று விட்டார்.

பரீட்சை காலமும் முடிந்து விட்டது பெறுபேறுகள் வரும் வரை. தொழில் பயிற்சி ஒன்றினை மேற்கொண்டேன். அம்மா தையல் இயந்திரத்தில் ஓய்வின்றி இருப்பதால் முள்ளம் தண்டு பாதிப்பு ஏற்பட்டு அப்பாவுடன் வைத்தியசாலைக்கு சென்று வந்தார். இருவரையும் பார்க்கும் போது எனக்கு அழுகையும் வேதனையாகவும் இருந்தது. அம்மாவை ஓய்வெடுக்கும் படி கூறிவிட்டு வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்து தங்கை இருவரையும் பாடசாலைக்கு அனுப்பி விட்டு தொழிற் பயிற்சிக்காக செல்வது வழக்கம். எனக்கு நட்பு வட்டங்கள் குறைவு.

அன்றும் வழமைப் போல, நான் தொழில் கற்கும் கல்லூரிக்குச் சென்றேன். அங்கே எனது அப்பா தொழில் புரியும் இடத்து வண்டியை கண்டேன். அதில் அப்பாவுடன் சக ஊழியர்களும், தங்கள் வேலை கவனிப்பதில் மும்முரமாய் இருந்தார்கள். அப்பா என்னை கண்டும் காணாதாவர் போல தன் கடமைகளைச் செய்துக்கொண்டிருந்தார். “பாவம் அப்பா எவ்வளவு சிரமம் இந்த வேலையில் கண்டதெல்லாம் துன்பமே, வெயில் வேற சுட்டெரிக்குது” மனதிற்குள் அப்பாவை நினைத்து பரிதாபப்பட்டேன். கையில் இரண்டு பெரிய உறைப் பைகளை வண்டியில் திணிப்பது தெரிந்தது. வீதி ஓரங்களில் விற்பனை செய்பவர்களிடம் ஏதோ கதைப்பது மட்டும் தெரிந்தது தூரத்தில் இருந்து பார்க்கும் பொழுது..... தேநீர் கடையில் தேநீர் வாங்கி குடித்துக் கொண்டிருந்தார். வெற்றிலை சப்பும் பழக்கமும் இருக்கிறது. வெற்றிலை வாங்கிக்கொண்டு ஒதுக்குப்புறமாக செல்வதைக் கண்டேன். ஒருவேளை, வெற்றிலை சப்பி துப்புவதற்கு ஓரமாக சென்றிருப்பாரோ தெரியவில்லை. நான் இவற்றையெல்லாம் அவதானித்து விட்டு எனது கல்லூரிக்குள் சென்று விட்டேன். மாலை வீடு வந்ததும் “இந்த வேலை சிரமமா அப்பா” என்று கேட்டேன். “ஏன் ராசா அப்படி கேட்கின்றாய் எனக்கு எந்த சிரமமும் இல்லை நான் படும் கஷ்டம் நீங்கள் மூவரும் படக்கூடாது இந்த சமூகம் அப்பா இந்த வேலையை செய்தாலும் நன்றாக படித்து நல்ல நிலையில் பிள்ளைகளை வளர்த்துள்ளார் என்று கூற வேண்டும் அதுவே என் பெருமை” என்றார்.

எனது தொழில் பயிற்சியும் முடிவுற்றது. பரீட்சை பேறுபேறுகள் நல்ல நிலையில், வந்தது. எனக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் கிட்டியது. அப்பா அம்மாவின் கனவும் நலவானது. ஐந்து வருடங்களின் பின் எனது பல்கலைக்கழக படிப்பு முடிவுற்றது. தங்கை இருவரில் ஒருவர் தாதியாகவும் கடைசி தங்கை வைத்தியத்துறையிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். விடுமுறையில் இருவரும் வீட்டிற்கு வந்த வேளையில் குடும்பமாக நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம். கடற்கரையில் அங்கங்கே நிறைந்த குப்பைகளாக குவிக்கப்பட்டிருந்தது. ஏதோ ஒரு அமைப்பால் கடற்கரை சுத்தம் என்ற தொணிப்பொருளில் சிரமதானம் செய்யப்பட்டிருந்தது. “நாளை அலுப்பு எடுக்கும் வேலை காத்திருக்கின்றது” என்றார் அப்பா. அம்மா அப்பாவை பார்த்து, “உங்களுக்கும் வயசாகி விட்டது இந்த வேலைக்கு ஓய்வு கொடுக்கலாம் அல்லவா 30 வருடங்களாக ஓய்வின்றி உழைக்கின்றீர்கள். பிள்ளைகளும் நல்ல நிலையில் வளர்ந்து விட்டார்கள். இனிய நமக்கு என்ன கவலை? அம்மா கவலையுடன் அப்பாவிடம் கூறிக் கொண்டிருந்தார்” அடுத்த வருடம் ஓய்வுக்கு எழுதிக் கொடுப்பதாக திட்டம்” என்றார் அப்பா. குவியலாக குவிக்கப்பட்ட குப்பைகளில் நாய்கள் உணவு ஏதும் கிடைக்குமா என்று கிளறிக் கொண்டிருந்தன. கடற்கரையால் செல்வோர் குப்பைகளை கண்டதும் எச்சில் துப்புவதும், வெற்றிலை எச்சில் துப்புவதுமாக அருவருப்பாக அக்குபையில் இவ்வாறான செயற்பாடுகளை செய்து கொண்டு அவ்வழியாக சென்று கொண்டிருந்தனர். என் மனதினுள் மிகப்பெரிய கவலை அப்பா இவ்வாறான அருவருப்பு என்று தெரிந்தும் குப்பைகளை அள்ளி வண்டியில் திணித்து அதனுடன் பயணித்து எங்களை வளர்த்துள்ளார்.

குப்பை அள்ளுபவர்களை குப்பைகள் தான் என்று நினைத்து அதை வீசும் பொருளாக மட்டுமே எண்ணுவதால்தான் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளை நாம் ஒவ்வொருவரும் செய்கின்றோம். குப்பை அள்ளுபவர்களை ஒரு கணம் சிந்தித்தால் இவ்வாறான செயற்பாடுகளை நாம் செய்ய மாட்டோம். அன்றே என் தந்தையின் வழியே உணர்ந்தவனாய் இது பற்றிய விழிப்புணர்வுகளை மக்களிடத்தில் உணர வைக்க வேண்டும் என்று உறுதிப்பூண்டவனாய் அப்பாவின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டேன்.





# அழகிய லொசான்

சுவிட்சர்லாந்து தேசத்தை எப்படி விவரிக்கலாம்? ‘சாக்லேட் தேசம்’? கறுப்புப் பணம் படைத்தவர்களின் சொர்க்கம்? கைக்கடிகாரங்களின் தலைமையகம்? நடுநிலை நாடு (இரண்டு உலகப் போர்களிலும் கலந்துகொள்ளவில்லை) என இப்படியெல்லாம் விவரிக்கலாம்தான். ஆனால், இவற்றையும் தாண்டி பன்முகம் கொண்ட நாடாக இது இருக்கிறது என்பது அங்கு சென்று தங்கியபோதுதான் தெரிந்தது.

சுற்றுலாப் பயணியாகச் சில நாள்கள் மட்டும் தங்காமல், இளைய மகனோடு சில மாதங்கள் அங்குத் தங்கியதில் அந்த நாட்டின் நாடியைப் பெருமளவு கணிக்க முடிந்தது. இந்தியாவிலிருந்து நாங்கள் செல்ல வேண்டிய ஸ்விஸ் நகரான லொசானுக்கு நேரடி விமானம் கிடையாது. ஜெனீவா வழியாக அல்லது மாற்றுப்பாதையில் பாரிஸ் நகருக்குச் சென்று, அங்கிருந்து செல்ல வேண்டும். நாங்கள் பாரிஸை அடைந்து அங்கிருந்து சுவிட்சர்லாந்து செல்லும் ரயிலில் ஏறினோம். சுமார் 5 மணி நேரப் பயணம். இருக்கைகள் வசதியானதாக இருந்தாலும், அது ‘டபுள் டெக்கர்’ ரயில் என்பதால் மாடிப்பகுதியில்தான் எங்களுக்கான இருக்கைகள் கிடைத்தன.

மூன்று மாதங்கள் தங்குவதற்கான ஐந்து கனமான பெட்டிகளை, கீழே உள்ள பெட்டிகள் வைப்பதற்கான பகுதியில் வைத்துவிட்டோம். அது அதிவேக ரயில் என்பதால் சில நிலையங்களில் மட்டுமே நின்றது. எங்களுக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்திருந்தாலும் பெட்டிகள் பாதுகாப்பாக இருக்கின்றனவா என்பதை எண்ணிக் கவலையாக இருந்தது. ரயில் நின்றபோதெல்லாம் என் மகனைக் கீழே சென்று பார்த்து வரச் சொன்னேன். இரண்டு முறை இறங்கிச் சென்று பார்த்தவர், பிறகு இறங்கிச் செல்லவில்லை. நான் காரணம் கேட்டபோது, “சுவிட்சர்லாந்துக்கு வந்தாச்சு. இனிமே கவலை இல்லை” என்றார். சுவிட்சர்லாந்து பற்றிய முதல் பிம்பம் இது!

ஜெனிவா ஏரிக்கு அருகே மேற்கு சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள ஓர் அழகிய நகரம் லொசான். மூன்று குன்றுகளில் உருவான நகரமும்கூட. சுமார் ஒன்றரை இலட்சம் பேர் வசிக்கும் இந்த நகரத்தில், பிரெஞ்சு மொழிப் பேசும் மக்கள் அதிகம். சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைமையகம் அங்குதான் உள்ளது. எனவே அந்த நகரத்தை ‘ஒலிம்பிக் தலைநகரம்’ என்கிறார்கள்.

சுவிட்சர்லாந்தில் மெட்ரோ ரயில் பாதை உள்ள ஒரே நகரமும் இதுதான். இங்கே பாதசாரிகளுக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சாலையைக் கடக்கும் இடத்தில் பாதசாரிகள் இருந்தால், மற்ற வண்டிகள் கண்டிப்பாக வழிவிட வேண்டும். முக்கியச் சாலைகளில், பாதசாரிகள் கடக்கும் இடத்தில் உள்ள ஒரு பொத்தானை இயக்கினால், அவர்களுக்கான பச்சை விளக்கு எரிகிறது. அப்போது வாகனங்கள் நின்று பாதசாரிகளுக்கு வழிவிடுகின்றன.

“உங்களுக்கு ஜெட்லாக் இல்லைன்னா நாளை காலை ரிப்போன் மார்க்கெட் போகலாம்” என்றார் மகன். மேற்கத்திய நாடுகளில் பெரு நகரங்களுக்கு நடுவே, முக்கியச் சாலைகளின் நடுவில்கூடப் பரந்த திறந்த வெளிகள் இருக்கும். இவற்றை ‘ஸ்கொயர்ஸ்’ (சதுக்கங்கள்) என்பார்கள். லொசான் நகரின் சதுக்கத்தில் பிரம்மாண்டமான திறந்தவெளியும் முக்கியச் சாலைகளின் இணைப்புப் பகுதியுமான ரிப்போன், ஒவ்வொரு சனிக்கிழமையும் புது வடிவமெடுக்கிறது. அது விவசாயிகள், வணிகர்களுக்கான நேரடிச் சந்தை.

### பேருந்துப் பயணமும் லொசான் சந்தையும்

லொசான் நகரில் பேருந்தில்தான் ரிப்போன் சந்தைக்குப் பயணமானோம். “மூன்று கிலோமீட்டர்தானே, நடந்தே சென்று விடலாம்” என்று நான் சொன்னபோது, “பேருந்து அனுபவம் வேண்டாமா?” என்று கேட்டார் மகன். சுவிட்சர்லாந்தில் பேருந்துப் பயணம் என்பது சுகமானது. சாலைகள் தூசில்லாமல் இருக்கும் என்பதால், இருக்கைகளும் பளிச்.

ஒரு செயலியைத் திறன்பேசியில் தரவிறக்கம் செய்து, அதன் வழியே நாம் நிற்கும் பேருந்து நிலையத்தில் எந்தெந்த வழித்தட பேருந்துகள் எப்போது வந்து சேரும் என்கிற விவரங்களைத் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம். சொன்ன நேரத்தில் சரியாகப் பேருந்தும் வந்துசேர்கிறது. ஒருவேளை சில நிமிடங்கள் தாமதமானாலும் அந்த விவரமும் செயலியில் வெளியாகிறது. ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் மரத்தால் செய்யப்பட்ட (பனிப் பிரதேசம் என்பதால்) பெஞ்சுகள் வைக்கப்பட்டிருந்தன.

பேருந்துகளில் தானியங்கிக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. வெளியிலிருந்து பொத்தானை அழுத்தினால் கதவுகள் திறக்கின்றன. பெரும்பாலானோர் ‘பாஸ்’ வைத்திருப்பதால், பேருந்துகளில் நடத்துநர் இருப்பதில்லை. பயணிகளின் வசதிக்காகப் பேருந்தின் உள்ளே ஆங்காங்கே சில பொத்தான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. யாரேனும் இறங்க வேண்டுமென்றால், அந்தப் பொத்தானை அழுத்தினால் போதும், அப்போது ஒரு விளக்கு எரியும், அடுத்த நிறுத்தத்தில் பேருந்து நிற்கும். ஒருவேளை, யாரும் அந்தப் பொத்தானை அழுத்தவில்லை என்றாலோ பேருந்து நிறுத்தத்தில் யாரும் ஏறவில்லை என்றாலோ பேருந்து நிற்காமல் செல்லும். சில பேருந்துகள் ஆங்காங்கே மின்சாரத்திலும் ஓடுகின்றன.






பேருந்து பயணங்களின்போது பரிசோதகர்களை அரிதாகவே பார்க்க முடிந்தது. ஆனால், பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தால் 100 ஸ்விஸ் ஃப்ராங்க் (9,000 ரூபாய்) அபராதமாக வசூலிக்கப்படுகிறது. பல பேருந்துகளில் சைக்கிளைக் கொண்டுசெல்ல அனுமதி உண்டு. நாய் போன்ற செல்லப் பிராணிகளையும் எடுத்துச் செல்லலாம். ஆனால், அதற்கென வகுக்கப்பட்டுள்ள சில விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டியது அவசியம்.

லொசானிலுள்ள சனிக்கிழமை சந்தையில் வித்தியாசமான பொருள்களைக் காண முடிந்தது. இந்தச் சந்தை வீதிகளில் சிலர் தங்களது இசைத் திறமையைக் காட்டி இரந்து வாழ்கிறார்கள். நாங்கள் அங்கு சென்றிருந்தபோது மணல் கலைஞர் ஒருவர் நாயை உருவாக்கிக் கொண்டிருந்தார். அருகில் சென்று பார்க்கும் வரை, அது நிஜ நாயைப் போலவே தோற்றமளித்தது. மேலும் தான்சானியா நாட்டைச் சேர்ந்த ஒரு குழு நடனம் ஆடிக்கொண்டிருக்க, அருகே தான்சானியா உணவுப் பொருள்களும் விற்பனைக்கு இருந்தன. ‘ககேரா’ எனும் தான்சானியாவின் வட மேற்குப் பகுதியைச் சேர்ந்த சிறு விவசாயிகள் அந்தப் பகுதியில் விளைவிக்கும் காபியை, லொசான் சந்தையில் விற்றுக் கொண்டிருந்தனர்.

### சைக்கிளில் இந்தியாவுக்கு வந்த ஐரினி

லொசானிலுள்ள ரிப்போன் சனிக்கிழமை சந்தையில் தேன், ஆலிவ் ஆகியவற்றை விற்றுக்கொண்டிருந்தார் ஓர் ஐரோப்பியப் பெண்மணி. “நீங்கள் இந்தியரா?” என்று கேட்டவர், ‘ஐரினி’ என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார். ’ஆமாம்’ என்று நான் பதில் அளித்தவுடன் அவர் முகத்தில் அப்படி ஒரு மகிழ்ச்சி. “நான் உங்கள் நாட்டுக்கு சைக்கிளில் வந்திருக்கிறேன்” என்று அவர் கூறியது எனக்கு வியப்பைத் தந்தது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சைக்கிள் பயணமாகவே இந்தியா வந்திருந்தாராம் அவர். தாஜ்மகால் முதல் கன்னியாகுமரி வரை சுற்றுலா சென்றிருக்கிறார். “இந்தியாவுக்கு வரத் தூண்டுதலாக இருந்தது எது?” என்கிற கேள்விக்கு, “உங்கள் நாட்டின் நடனக்கலைதான் முக்கியக் காரணம். கதகளி, பரதநாட்டியத்துக்கு நான் அடிமை” என்றார். ஐரினியின் சொந்த நாடு கிரீஸ். அங்கிருந்துதான் அவர் இந்தியாவுக்குப் பயணித்திருக்கிறார். “ஈரான் நாட்டைக் கடந்தபோதுதான் திணறி விட்டேன். அங்கே உடலை முழுவதும் உடையால் மறைத்துதான் பெண்கள் பயணம் செய்ய முடியும். கொளுத்தும் வெயிலில் அப்படி சைக்கிளை மிதித்துச் சென்றது பெரும் சவாலாக இருந்தது” என்றார்.



சீனச் சிற்றுண்டி ‘மோமோ’வைத் தயாரித்துச் சுடச்சுட விற்றுக் கொண்டிருந்தார் லோப்சங் டென்சிங். தெளிவாக ஆங்கிலத்தில் உரையாடிய அவரது தாய்நாடு திபெத். கடந்த இரண்டு வருடங்களாகத்தான் சுவிட்சர்லாந்தில் இருக்கிறாராம். “என்ன காரணம்?” என்றபோது, “அதுவரை இங்கு அனுமதி கிடைக்கவில்லை. மனைவி பல ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வந்து, செவிலியராக வேலை செய்கிறார். அவருடைய கணவராகவே இருந்தாலும் இந்நாட்டில் நிரந்தரமாகத் தங்கும் உரிமை தாமதமாகத்தான் கிடைத்தது” என்றார்.

போலீஸ் சீருடையில் உற்சாகமாகக் காபி விநியோகித்துக் கொண்டிருந்தார் கேப்ரியலே. இந்தியப் பயணம் தனது ‘பக்கெட் லிஸ்டில்’ இருப்பதாகத் தெரிவித்தார்.

ஒரு பிரபல கடையில் புகழ்பெற்ற சுவிட்சர்லாந்து சாக்லேட்களை விற்கும் பிரிவில் இன்முகத்தோடு விற்பனை செய்து கொண்டிருந்தார் அலீனா. அவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். “இது மென்மையாக இருக்கும். இதில் கோகோ அதிகம். இந்தத் தேங்காய் கலந்த சாக்லேட் புதுமையானது. பாதாம் உள்ள சாக்லேட்டின் சுவையே அலாதி” என அவர் சாக்குலேட்டுகள் பற்றி உற்சாகம் குறையாமல் விளக்கிக் கொண்டிருந்தார். ‘சேல்ஸ்மேன்ஷிப்’ என்கிற சொல்லை இனி ‘சேல்ஸ்உமன்ஷிப்’ என்றும் மாற்றிவிடலாம் என தோன்றியது! ஆக லொசானில் உள்ள சனிக்கிழமை சந்தை என்பது விற்பனையில் மட்டுமல்ல வெவ்வேறு நாட்டைப் பூர்விகமாகக் கொண்ட மனித உணர்வுகளின் சங்கமமாகவும் இருந்தது.

### பசுக்களின் தேசம்

‘ஃப்ரிபோர்க்’ என்கிற கான்ட்டனில் (மாவட்டங்களை ‘கான்ட்டன்’ என்று அழைக்கிறார்கள்.) அமைந்திருக்கிறது பிரபல சுற்றுலாத் தலமான ‘க்ரூயெர்’ (Gruyer). இந்தப் பகுதியில் உள்ள புற்கள் மிகச் சிறந்த தரம் கொண்டவையாம். ஹெலிகாப்டர்களில் பசுக்களைக் கொண்டுவந்து, இங்கே இறக்கிவிட்டுப் புற்களை மேய வைத்துவிட்டு, பிறகு அழைத்துச் செல்வதும் உண்டு என்று ஒருவர் கூறியது வியப்பை வரவழைத்து.

என் வியப்பைப் புரிந்துகொண்டு, “உண்மைதான். இங்கிருந்து புற்களை ஏற்றுமதி செய்வதும் உண்டு. அந்த அளவுக்கு க்ரூயெர் புற்களுக்கு டிமாண்ட் அதிகம்” என்றார் அவர்.

வேறு எந்த விதத்திலும் வருமானம் இல்லாமல் பசு வளர்ப்பினால் மட்டுமே பெரும் பணக்காரர்கள் ஆனவர்கள் உண்டு. பால், மாட்டிறைச்சி, தோல் பொருள்கள் போன்று பல விதங்களில் பசு வருமானத்துக்கு வழிகோலுகிறது. உணவில் சீஸ், தயிர், வெண்ணெய் போன்றவை பெரும்பங்கு வகிப்பதால் இவற்றுக்கான டிமாண்ட் குறைவதே இல்லை. ஒரு பசுவுக்கு ஆண்டுக்கு 5,000 டாலர் என்று குடும்பங்களுக்கு அரசு மானியம் அளிக்கிறது.

பசுவின் கழுத்தில் அணிவிக்கும் மணி அதிக எடை கொண்டதாக இருக்கும். விலையும் அதிகம். கிட்டத்தட்ட 2,000 டொலர்கள். என்றாலும் இந்த முதலீடு விவசாயியைப் பெருமை கொள்ளவே செய்கிறது. சுவிட்சர்லாந்தில் 7 இலட்சம் பசுக்கள் உள்ளன. அந்த நாட்டில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 87 இலட்சம். ஆக 12 பேரில் ஒருவர் பசுவின் உரிமையாளராக இருக்கிறார். சில கிராமங்களில் மக்களின் எண்ணிக்கையைவிடப் பசுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. வெயில் காலத்தில் பசுமை படர்ந்த ஆல்ப்ஸ் மலைப் பகுதிக்கு அவற்றை அனுப்பி விடுகிறார்கள் (உரிமையாளர்கள் சார்பாக அங்கே குடிசையில் ஒருவர் பசுக்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருப்பார்). பசுக்கள் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 100 நாள்களுக்கு மலைப்பகுதியில் ஆரோக்கியமான புற்களை மேய்கின்றன.

குளிர்காலம் வந்தவுடன் அவை வீடு திரும்ப வேண்டியதுதான். அவை வீடு திரும்பும் நாளை மக்கள் கொண்டாடுகிறார்கள். பசுக்களுக்கு ரிப்பன், பூக்கள் அணிவித்து, மணிகள் கட்டி, இந்த நாளை ’ஆல்பக்ஜுக்’ (alpabzug) என்கிற பெயரில் கொண்டாடுகிறார்கள்.

ஒரு பசுவை ‘ஸ்பான்சர்’ செய்தால் நீங்கள் சீஸ் தயாரிப்பில் பங்கு பெறுகிறீர்கள் என்று அர்த்தம். அந்த சீஸில் ஒரு பகுதி உங்களைத் தேடிவரும். க்ரூயெர் அங்குள்ள அரண்மனைக் கோட்டைக்குப் பெயர் போனது. ஆனால், நாங்கள் சென்றது புகழ்பெற்ற ‘லா மெய்சன் டு க்ரூயெர்’ (La Maison du Gruyre). இது ஒரு பிரபல சீஸ் தயாரிப்புத் தொழிற்சாலை. ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. நீண்ட வரலாறு கொண்டது.

அங்கிருக்கும் கண்காட்சி சுவாரசியமானது. தினமும் மூன்று முறை பார்வையாளர்களுக்கு அனுமதி உண்டு. ஒரு ‘ஹெட்செட்’ தருகிறார்கள். ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, ஜெர்மன், ஸ்பானிஷ், போலிஷ் போன்ற 13 மொழிகளில் அந்தத் தொழிற்சாலை குறித்த விவரங்கள் விளக்கப்படுகின்றன. நாற்பது நிமிடங்கள் செலவழித்தால் கண்காட்சியைப் பார்த்து முடித்து விடலாம். அது மிகவும் வித்தியாசமாக இருந்தது.

# தயார்

நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை(14) நடைபெறும் பொதுத் தேர்தலுக்கான வாக்கு பெட்டிகளையும் அதிகாரிகளையும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

நாடு முழுவதும் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 160 தொகுதிகளில் அமைக்கப்படவுள்ள 13,421 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரையில் வாக்களிப்புகள் இடம்பெறவுள்ளன. நாடு முழுவதும் 8352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

(தமிழ்மிரர் நிருபர்கள்)



பதுளையில்...



மட்டக்களப்பில்...



யாழ்ப்பாணத்தில்...



நுவரெலியாவில்...



திருகோணமலையில்...




வவுனியாவில்...



முல்லைத்தீவில்...

ஈராக்

## பெண்ணின் திருமண வயதில் திருத்தம்:
# 9ஆக குறைகிறது



ஈராக்கில், பெண்ணின் திருமண வயதை 18இல் இருந்து 9ஆக குறைக்க சட்ட திருத்தம் செய்ய, அந்நாட்டு பாராளுமன்றத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஷியா பழைமைவாத குழுவினர், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வகிப்பதால், இந்த சட்ட திருத்தத்தை நிறைவேறுவதில் சிக்கல் இருக்காது என கூறப்படுகிறது.

ஆனாலும், பெண்கள், மனித உரிமை குழுவினர், இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், இளம் பெண்கள் மீதான பாலியல் மற்றும் உடல் ரீதியிலான துன்புறுத்தல்கள் அதிகரிக்கும். அத்துடன், அவர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

மேலும், பெண்களின் சொத்துரிமை, வாரிசுரிமை மற்றும் விவாகரத்து கோரும் உரிமை பறிக்கப்படும் என கவலை, அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஈராக்கில் உள்ள பெண்கள் குழுவினரும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எனினும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து, பெண்ணின் திருமண வயதில் திருத்தங்கள் செய்துள்ள இந்த மசோதாவைச் சட்டமாக இயற்றும் முயற்சிகளில், ஈராக் அரசு ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்

## ஹிஸ்புல்லா மீதான
# 'தாக்குதல் தொடரும்'



லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று, இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாக வெளியான செய்தி குறித்து கருத்து தெரிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


தொடர்ந்துரைத்த அவர், "போர் நிறுத்தம் தொடர்பாக ஹிஸ்புல்லா அமைப்பினரிடம் அதிகாரப்பூர்வமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை. இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த மாட்டோம். ஆயுதங்களைக் கடத்த மாட்டோம் என்று ஹிஸ்புல்லா அமைப்பினர் உறுதி அளிக்க வேண்டும்.

" அவ்வாறு வாக்குறுதி அளித்தால் மட்டும் போதாது. அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். அதுவரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படாது. ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தப்படும். எங்களது முழு பலத்தோடு தாக்குதலைத் தொடருவோம். ஈரான் அரசுக்கு இஸ்ரேல் இராணுவத்தின் வலிமையைப் புரிய வைத்துள்ளோம். ஈரானின் அணு ஆயுத திட்டங்களைத் தகர்க்க இஸ்ரேல் உறுதி பூண்டிருக்கிறது" என்றார்.

இது தொடர்பில், ஹிஸ்புல்லா அமைப்பின் ஊடக பிரிவு தலைவர் முகமது ஆரிப் கூறுகையில்,, "போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேலுடன் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. எனினும், இருதரப்புக்கு இடையே மூன்றாம் தரப்பு மூலம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன" என்று தெரிவித்தார்.

சீனா

## மைதானத்துக்குள் கோர விபத்து:
# 35 பேர் பலி; 43 பேர் காயம்



சீனா - ஜுஹாய் நகரில், திங்கட்கிழமை (11) இரவு, 62 வயது வயோதிபர் ஒருவர், மக்கள் கூட்டத்துக்குள் காரை ஓட்டிச் சென்று விபத்து ஏற்படுத்தியதில், 35 பேர் உயிரிழந்துள்ளதுடன், 43 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜுஹாய் நகரத்தில் உள்ள ஒரு விளையாட்டு மையத்தில், திங்கட்கிழமை இரவு 7.48 மணிக்கு, பொதுமக்கள் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தபோது, குறித்த வயோதிபர், காரை ஓட்டிச் சென்று, அவர்கள் மீது மோதியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, காரை ஓட்டிச் சென்ற வயோதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். எனினும், இது விபத்தா அல்லது தாக்குதலா என்பது குறித்து உடனடியாக தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புது டில்லி



# மோடி நைஜீரியாவுக்கு விஜயம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, வரும் 16ஆம் திகதியன்று, நைஜீரியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

17 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் நைஜீரியாவுக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இதுவாகும்.

2 நாட்கள் கொண்ட இந்த விஜயத்தில், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் நைஜீரிய பிரதிநிதிகளுடன் மோடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தொடர்ந்து நைஜீரியாவில் உள்ள இந்திய வம்சாவளியினரிடமும் அவர் உரையாற்றவுள்ளார். இதனையடுத்து பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெறும் ஜி20 மாநாட்டிலும் மோடி கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழகம்

## அரச பாடசாலையில்
# 'கோட்', 'வேட்டையன்' திரையிடல்




நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் வி.கே.புரத்தில் உள்ள அரச உதவி பெறும் பெண்கள் பாடசாலையில், விஜய் நடித்த 'கோட்' மற்றும் ரஜினி நடித்த 'வேட்டையன்' திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

கடந்த 9ஆம் திகதியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், 6 முதல் 12ஆம் வகுப்பு மாணவிகளுக்காக, நடிகர் விஜய் நடித்த 'கோட்' படம் திரையிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவிகளுக்காக நடிகர் ரஜினி நடித்த 'வேட்டையன்' படம் திரையிடப்பட்டுள்ளது.

இதற்காக விஜய் படத்துக்கு தலா ரூ.25, ரஜினி படத்துக்கு தலா ரூ.10 வீதம் மாணவிகளிடம் கட்டாயமாக வசூலிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

எனினும், பெற்றோர் தரப்பில் புகார்கள் தெரிவிக்கப்படவில்லை.

இதையடுத்து, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சிவகுமார் உத்தரவின் பேரில், கல்வித்துறை அதிகாரிகள் பள்ளியில் விசாரணை மேற்கொண்டனர்.

# முதலாமிடத்துக்கு முன்னேறிய ஷகீன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு பாகிஸ்தானின் ஷகீன் ஷா அஃப்ரிடி முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளிலும் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை ஷகீன் அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்:
1.ஷகீன் ஷா அஃப்ரிடி,
2. ரஷீட் கான், 3.கேஷவ் மஹராஜ்,
4.குல்தீப் யாதவ்,
5.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்,
6.ஜஸ்பிரிட் பும்ரா,
7.ட்ரெண்ட் போல்ட்,
8.மொஹமட் சிராஜ்,
9.அடம் ஸாம்பா,
10.ஜொஷ் ஹேசில்வூட்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்:
1.பாபர் அஸாம்,
2.றோஹித் ஷர்மா,
3.ஷுப்மன் கில்,
4.விராட் கோலி,
5.ஹரி டெக்டர்,
6.டரைல் மிற்செல்,
7.பதும் நிஸங்க,
8.ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்,
9.சரித் அசலங்க, 10.ஷே ஹோப்.

பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகளில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் ரஷீட் கான், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, இப்போட்டிகளில் 116 ஓட்டங்களைப் பெற்றதோடு, 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் மெஹிடி ஹஸன் மிராஸ் எட்டாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 5 சகலதுறைவீரர்கள்:
1.மொஹமட் நபி,
2.சிகண்டர் ராசா, 3.ரஷீட் கான்,
4.மெஹிடி ஹஸன் மிராஸ்,
5.ஜெர்ஹார்ட் எரஸ்மஸ்.

இந்நிலையில், நியூசிலாந்துக்கெதிரான இரண்டு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இலங்கையின் வனிது ஹசரங்க, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஆறாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது போட்டியில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகளின் அகீல் ஹொஸைன், நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலிரண்டு போட்டிகளிலும் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் ரவி பிஷ்னோய், எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.




முதல் 10 பந்துவீச்சாளர்கள்:
1.அடில் ரஷீட், 2.வனிது ஹசரங்க,
3.அகீல் ஹொஸைன்,
4.மகேஷ் தீக்ஷன,
5.குடகேஷ் மோட்டி,
6.ரஷீட் கான்,
7.ரவி பிஷ்னோய்,
8.அடம் ஸாம்பா,
9.பஸல்ஹக் பரூக்கி,
10.ஜொஷ் ஹேசில்வூட்.

சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையிலும் ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தை ஹசரங்க அடைந்துள்ளார்.

முதல் 5 சகலதுறைவீரர்கள்:
1.லியம் லிவிங்ஸ்டோன்,
2.டிபேந்திர சிங் ஐரீ,
3.ஹர்திக் பாண்டியா,
4.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்,
5.வனிது ஹசரங்க.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது போட்டியில் 103 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் பில் ஸோல்ட், துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி 2ஆம் இடத்தையடைந்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட தொடரின் இரண்டாவது போட்டியில் 83 ஓட்டங்களை பெற்ற இங்கிலாந்தின் ஜொஸ் பட்லர், ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர, இதில் முதலாவது போட்டியில் 38 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் நிக்கலஸ் பூரான், 11ஆம் இடத்திலிருந்து ஓரிடம் முன்னெறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்:
1.ட்ரெவிஸ் ஹெட்,
2.பில் ஸோல்ட்,
3.சூரியகுமார் யாதவ்,
4.பாபர் அஸாம்,
5.மொஹமட் றிஸ்வான்
6.ஜொஸ் பட்லர்,
7.யஷஸ்வி ஜைஸ்வால்,
8.பதும் நிஸங்க,
9.ஜொஷ் இங்லிஸ்,
10. நிக்கலஸ் பூரான்.

# பாகிஸ்தானை வீழ்த்துமா அவுஸ்திரேலியா?




அவுஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது பிறிஸ்பேணில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா இழந்துள்ளதுடன், அணித்தலைவர் மிற்செல் மார்ஷ், ட்ரெவிஸ் ஹெட், பற் கமின்ஸ், மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட், கமரன் கிறீன் ஆகியோர் இல்லாத நிலையில் திடீரென அவ்வணி அழுத்தத்தில் காணப்படுகிறது.

குறிப்பாக ஹரிஸ் றாஃப், ஷகீன் ஷா அஃப்ரிடி, நசீம் ஷாவை உள்ளடக்கிய பந்துவீச்சு வரிசையை எவ்வாறு அவுஸ்திரேலியா சமாளிக்கிறது என்பதிலேயே தொடரின் போக்கு தீர்மானிக்கப்படப் போகிறது.

அந்தவகையில் கிளென் மக்ஸ்வெல், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆகிய சிரேஷ்ட வீரர்களிடமிருந்து போட்டியில் தாக்கம் செலுத்தக்கூடிய பங்களிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன், டிம் டேவிட், ஜேக் பிறேஸர்-மக்குர்க், மத்தியூ ஷோர்ட், அணித்தலைவர் ஜொஷ் இங்லிஸ், ஆரோன் ஹார்டியின் துடுப்புகளிலிருந்தும் ஓட்டங்கள் அவசியமாகின்றது.




# ஓய்வு பெறும் நபி

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற விரும்புவதாக ஆப்கானிஸ்தானின் முன்னாள் அணித்தலைவர் மொஹமட் நபி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முடிவிலேயே இக்கருத்துக்களை சகலதுறைவீரரான நபி வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற 39 வயதான நபி தொடர்ந்தும் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடவுள்ளார்.

இதுவரையில் 167 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 3,600 ஓட்டங்களைப் பெற்ற நபி, 172 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 14 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.